**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 145/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தேவன் | நாள் | 13.02.2023 |
| தகப்பனார் பெயர் | கண்ணப்ப நாயுடு | | |

**<u>1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

26) தாவா சொத்திற்கு செல்வதற்கு ஏற்கனவே எனக்கு பாதை உள்ள நிலையில் நான் தற்போது புதிதாக பாதை கோருவதற்கு வசதியுரிமை சட்டத்தின் படி எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. மேற்படி தடவழியில்தான் நான் சென்று வருகிறேன். அதை விட்டால் எனக்கு வேறு தடவழி இல்லை.

27) 1, 2 பிரதிவாதிகளின் பேரில் 3 ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தது குறித்து எனக்கு தெரியும் என்றால், சரிதான். எப்போது எழுதி வைத்தார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால், சுமார் 15 வருடங்களுக்கு முன் தெரிய வந்தது.

28) என் தாவாவில் நான் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி வைத்தது குறித்து எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால், சுமார் 15 வருடங்களுக்கு முன் தெரிய வந்தது.

29) தாவாவில் பரிகாரம் கோரியுள்ள தடவழி பாதை நான் எனக்கு மட்டும் சொந்தமானது என பரிகாரம் கோருகிறேனா என்றால், இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் ஆகிய நாங்கள் இருவரும் அதை பொது பாதையாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்றுதான் பரிகாரம் கோருகிறேன்.

30) என் வழக்குரையிலோ அல்லது பிரமாண பத்திரிக்கையிலோ தாவா தடவழி பாதையானது எந்த சர்வே எண்ணில் தொடங்கி எந்த சர்வே எண்ணில் சென்று எந்த சர்வே எண்ணில் முடிகிறது என நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால், சரிதான்.

31) என் வழக்குரையுடன் தாவா சொத்திற்குரிய புலவரைபடம் மற்றும் பட்டா ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். ச.எண்.359/1F ற்குரிய பட்டா எண் என்ன என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை.

32) ச.எண்.359/1F2 ஆனது தற்போது என்னென்ன உட்பிரிவுகளாக பிரிந்துள்ள என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது நான் செல்லாது என விளம்புகை செய்யக்கோரியுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரங்களிலும் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

33) 3ம் பிரதிவாதி கண்ணப்பன் அவரது பேரன்களான 1, 2 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கோர எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

34) 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் விவசாயம் செய்யவோ, அவர்கள் தாவா சொத்தை அனுபவிக்கவோ, தாவா சொத்தில் நுழைய விடாமலும் நானும், என் ஆட்களும் தடுத்து வருகிறோம் என்றாலும், மேற்படி தாவா சொத்தை அபகரிக்கும் எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

35) வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை மட்டுமின்றி 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களையும் அனுபவிக்க விடாமல் அபகரிக்கும் நோக்கத்தில் என் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தடுத்து வருகிறேன் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் தடுப்பதால்தான் 1, 2 பிரதிவாதிகள் மேச்சேரி காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தனர் என்றாலும், என் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி புகாரை திரும்ப பெற நான் 1, 2 பிரதிவாதிகளை மிரட்டி வருகிறேன் என்றால், சரியல்ல.

36) வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தின் படி நான் கூட்டு உரிமையாளரோ அல்லது கூட்டு பங்குதாரரோ இல்லை என்றாலும், அதனால் தடவழி கேட்பதற்கு எனக்கு எவ்வித

உரிமையும் இல்லை என்றாலும், சரியல்ல.

37) என் வழக்குரையிலும், என் முதல் விசாரணை சாட்சியத்திலும் தாவா தடவழி பாதையின் மீது எனக்கு நீடனுபோக வசதியுரிமை உள்ளதா அல்லது இன்றியமையா வசதியுரிமை உள்ளதா என்பது குறித்து தெளிவாக கூறவில்லை என்றால், சரியல்ல.

38) வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் எனக்கு எவ்வித தடவழி உரிமையும் கூறப்படாததால் வேறு நபர்களின் சொத்தில் வசதியுரிமை கோர எனக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல.

39) என் தந்தை எனக்கு தடவழி உரிமையை 13.06.2000ம் தேதியில் 20 ரூபாய் முத்திரை தாளில் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி 20 ரூபாய் முத்திரை தாளில் உள்ள பத்திரத்தை இவ்வழக்கை தாக்கல் செய்த சமயத்திலேயே நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

40) கடந்த 22.02.2022ம் தேதியில் என் வழக்கறிஞர் மூலமாக IA.1/2022 என்ற மனுவை கூடுதல் ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்ததை ஏற்றுக்கொள்ள தாக்கல் செய்திருந்தேன் என்றால், சரிதான். மேற்படி மனு கடந்த 09.03.2022ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி தள்ளுபடி உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல.

41) மேற்படி 20 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 02.09.2013ம் தேதியில் எழுதிக்கொடுப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி 20 ரூபாய் பத்திரம் 24.09.2013ம் தேதியில் வாங்கியதாக கண்டுள்ளதாலும், மேற்படி பத்திரத்தில் முதல் 2 பக்கங்களில் கையெழுத்து எதுவும் இல்லை என்பதாலும், தானசெட்டில்மெண்ட் ஆவணம் போர்ஜரியானது என நீதிமன்றம் தீர்மானித்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

42) மேற்படி 20 ரூபாய் பத்திரத்தில் தடவழி குறித்து எழுதப்பட்ட தானசெட்டில்மெண்ட்

ஆவணம் போர்ஜரியானது என இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளதால் மேற்படி பத்திரத்தின் படி தடவழி கோர எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. எனவே 1, 2 பிரதிவாதிகள் பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என கோர எனக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல. நான் உண்மையை மறைத்து போலியான ஆவணங்கள் மூலம் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும், தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

43) 3ம் பிரதிவாதி கண்ணப்பன் இறந்துவிட்டார் என்றால், சரிதான். அவர் இறந்து சுமார் 5, 6 வருடங்கள் இருக்கும். 3ம் பிரதிவாதி இறந்தது குறித்து இதுவரை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றாலும், அவரது சட்டப்படியான வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், சரிதான். 3ம் பிரதிவாதியின் உரிய சட்டப்படியான வாரிசுகளை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

44) ச.எண்.359/1F2A ல் நிலையிலுள்ள வண்டிப்பாதையானது 1, 2 பிரதிவாதிகள் அவர்களது நிலத்திற்க்கு போய்வருவதற்கான பாதை என்பதால் அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையிலும் மேற்படி தடவழி 1, 2 பிரதிவாதிகளுடையது என குறிப்பிட்டுள்ளதாலும், அதன்பேரில் நான் எவ்வித பலனும் அடைய இயலாது என்றால், சரியல்ல. அதுகுறித்து எந்த பரிகாரமும், உரிமையும் நான் கோர இயலாது என்றால், சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.